# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 58— 1973 මැයි 04 වැනි සිකුරාදා — 1973.05.04

58 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு மே மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 191 | வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| பதவிகள்—வெற்றிடம் | — | வரவு செலவுத் திரட்டுகள் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 193 | ஆதன விற்பனைகள் | — |
| துணை விதிகள் | 195 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


கவனிக்க.—முத்திரை (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல்.ஜீ.டி. சீரி/10/13

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்
183 ஆம் பிரிவின்கீழான கட்டளை

1968 இன் 42 ம் இலக்கச் சட்டத்தாற் திருத்தப்பட்டபடியான (256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 183 ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான் இக்கட்டளைவாயிலாக புசல்லாவை பட்டினம் சம்பந்தமான முன் சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1973 பெப்புருவரி 5 இன் 45/2 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அதனோடுள்ள கடைசிப் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் 1973 மே 4 ம் திகதியிலிருந்து திருத்துகிறேன்.

"(ஆ) அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் அப்பட்டினத்திற்கு ஒரு புதிய பட்டின சபை அமைக்கப்பட்டு அச்சபை தனது தலைவரைத் தெரிவுசெய்யும் வரைக்கும், அந்நேக்கத்திற்கென அக்கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு பட்டின சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதற்குரிய கடமைகளைச் செய்வதற்குமாக இராஜகிரியா, நாவல வீதி 294/5 ம் இலக்கத்தைச் சேர்ந்த லியனகே கிருன்வில்லி டிக்சன் பெரேரா அவர்களை புசல்லாவை பட்டினத்தின் கருமங்களை நிர்வகிப்பதற்காக விசேட ஆணையாளராக நியமிக்கிறேன்."

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு.
1973 ம் ஆண்டு ஏப்ரல் மீ 25 ந் ஷ.
5-131—04.05.73ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியினும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் ஷ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

---

எல்.டி.—பி125/34

சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டம்
5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(231ம் அத்தியாயமான) சுடுகாடுகள், இருகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 23 ந் உ.

கட்டளை

1. இதனோடுள்ள அட்டவணை ஆ வில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், வரையறுத்துக்கூறப்பட்டுள்ளதுமான எல்லைகளுக்குள் இறப்பவர்களைப் புதைப்பதற்காக அல்லது தகனஞ்செய்வதற்காக, இதனோடுள்ள அட்டவணை அ வில் விவரிக்கப்பட்டுள்ள காணியில் பொது சுடுகாடு இடுகாடு ஒன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது.

2. இக்கட்டளையின் 1 ம் பந்தியின் கீழ்த் தாபிக்கப்படும் பொது சுடுகாடு, இடுகாடு, சுடுகாடுகள், இருகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 10, 15, 16 23 ஆகிய பிரிவுகளின் நடைமுறையினின்றும் முழுதாக விலக்களிக்கப் படுதல் வேண்டும்.

அட்டவணை அ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றுக் கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள கிரிஎல்லக் கிராம சேவகர் பிரிவிலுள்ள மெதப்பற்றுக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் அமைந்துள்ளதும் 182 ஆம் இலக்க இறுதிக் கிராம மாதிரிப்படத்திலான 370 ஆம் இலக்க 2 ஆம் குறைநிரப்பியில் இன்னும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளதும் 2ஏ 0றூ. 06·3 பேர்ச்சுக்கள் விஸ்தீரணத்தைக் கொண்டதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான பொறலெஸ்ஸவத்தை என்றழைக்கப்படும் காணிப்பிரதேசம் அனைத்தும் :—

வடக்கு : 182 ஆம் இலக்க இறுதிக்கிராம மாதிரிப்படத்திலுள்ள 216 ஆம் இலக்கக் கண்டத்தினால் ;

கிழக்கு : 182 ஆம் இலக்க இறுதிக்கிராம மாதிரிப்படத்திலுள்ள 210 ஆம் இலக்கக் கண்டத்தினால் ;

தெற்கு : 182 ஆம் இலக்க இறுதிக்கிராம மாதிரிப்படத்திலுள்ள 210 ஆம் இலக்கக் கண்டத்தினால் ;

மேற்கு : 182 ஆம் இலக்க இறுதிக்கிராம மாதிரிப்படத்திலுள்ள 210 ஆம் இலக்கக் கண்டத்தினால்.

அட்டவணை ஆ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக் கோறளையிலுள்ள கிரிஎல்லக் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இடங்கொடக் கிராமத்தையும் கிரிஎல்லக் கிராமத்தின் ஒரு பாகத்தையும் கொண்ட காணிப் பிரதேசம் அடங்கலும்.

5—103/1—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டம்
5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(231 ம் அத்தியாயமான) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவுல்கள்
அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஏப்றில் மீ 23 ந் உ.

கட்டளை

1. இதனோடுள்ள அட்டவணை ஆ வில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், வரையறுத்துக் கூறப்பட்டுள்ளதுமான எல்லைகளுக்குள் இறப்பவர்களைப் புதைப்பதற்காக அல்லது தகனஞ் செய்வதற்காக, இதனோடுள்ள அட்டவணை அ வில் விவரிக்கப்பட்டுள்ள காணியில் பொது சுடுகாடு, இடுகாடு ஒன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது.

2. இக்கட்டளையின் 1 ம் பந்தியின் கீழ்த் தாபிக்கப்படும் பொது சுடுகாடு இடுகாடு, சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 10, 15, 16, 23 ஆகிய பிரிவுகளின் நடைமுறைகளினின்றும் முழுதாக விலக்களிக்கப்படுதல்வேண்டும்.

அட்டவணை அ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக்கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள மெதபற்றுக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள யட்டிபவ்வக் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்டு வைத்திருக்கப்பட்டுள்ள இறுதிக்கிராம மாதிரிப்படம் 218 இலுள்ள 623 ஆம் கண்டமென இன்னமும்குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளதும் 1ஏ 0றூ 0.03பே. விஸ்தீரணத்தைக் கொண்டதும் சொல்லப்பட்ட மாதிரிப்படத்தில் 624ஆம் கண்டத்தினால் சகல திசைகளும் எல்லைப்படுத்தப்பட்டதுமான தஹண்டிகலே முக்கலன என்றழைக்கப்படும் காணிப்பிரதேசமனைத்தும்.

அட்டவணை ஆ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக் கோறளையிலுள்ள யட்டிபவ்வக் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள எல்லகவக் கிராமத்தைக் கொண்ட காணிப் பிரதேசம் அடங்கலும்.

5—103/2—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டம்
5ஆம் பிரிவின் கீழான கட்டளை

(231 ம் அத்தியாயமான) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 23 ந் உ.

கட்டளை

1. இதனோடுள்ள அட்டவணை ஆ வில் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், வரையறுத்துக் கூறப்பட்டுள்ளதுமான எல்லைகளுக்குள் இறப்பவர்களைப் புதைப்பதற்காக அல்லது தகனஞ்செய்வதற்காக, இதனோடுள்ள அட்டவணை அ வில் விவரிக்கப்பட்டுள்ள காணியில் பொது சுடுகாடு, இடுகாடு ஒன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது.

2. இக்கட்டளையின் 1 ம் பந்தியின் கீழ்த் தாபிக்கப்படும் பொது சுடுகாடு இடுகாடு சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 10, 15, 16, 23 ஆகிய பிரிவுகளின் நடைமுறையினின்றும் முழுதாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை அ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக் கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள மெதபற்றுக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள ஹிந்துரங்கலக் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்டு வைத்திருக்கப்பட்டுள்ள இறுதிக் கிராமமாதிரிப்படம் 56 இலுள்ள 454 ஆம் கண்டமென இன்னமும் குறிப்பாக, விவரிக்கப்பட்டுள்ளதும் 1ஏ 0றூ 0 பே. விஸ்தீரணத்தைக் கொண்டதும் சொல்லப்பட்ட மாதிரிப்படத்தில் 457 ஆம் கண்டத்தினால் சகல திசைகளும் எல்லைப்படுத்தப்பட்டதுமான கனேமுக்கலான என்றழைக்கப்படும் காணிப்பிரதேசமனைத்தும்.

அட்டவணை ஆ

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக் கோறளையிலுள்ள ஹிந்துறங்கலக் கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள ஹிந்துறங்கலக் கிராமத்தைக் கொண்ட காணிப்பிரதேசம் அடங்கலும்.

5—103/3—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

**சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டம்**
5ஆம் பிரிவின் கீழான கட்டளை

(231 ம் அத்தியாயமான) சுடுகாடு, இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1973 ந் ஆண்டு ஏப்ரில் மீ 23 ந

**கட்டளை**

1. இதனோடுள்ள அட்டவணை ஆ வில் குறிக்கப்பட்டுள்ளதும், வரையறுத்துக் கூறப்பட்டுள்ளதுமான எல்லைகளுக்குள் இறப்பவர்களைப் புதைப்பதற்காக அல்லது தகனஞ் செய்வதற்காக, இதனோடுள்ள அட்டவணை அ வில் விவரிக்கப்பட்டுள்ள காணியில் பொது இடுகாடு சுடுகாடு ஒன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது.

2. இக்கட்டளையின் 1 ம் பந்தியின் கீழ்த் தாபிக்கப்படும் பொது சுடுகாடு, இடுகாடு, சுடுகாடுகள், இடுகாடுகள், கட்டளைச்சட்டத்தின் 10, 15, 16, 23 ஆகிய பிரிவுகளின் நடைமுறையினின்றும் முழுதாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை அ**

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக் கோறளைப் பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவிலுள்ள மெதபற்றுக் கிராமச் சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் உள்ள நெதுருன கிராமத்தில் அமைந்துள்ளதும் இறுதிக்கிராம மாதிரிப்படம் 53 இலுள்ள 285 ஆம் கண்டமென இன்னமும் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளதும் 0ஏ., 2றூ., 38பே. விஸ்தீரணமுள்ளதும் சொல்லப்பட்ட மாதிரிப்படத்தில் 286ஆம் கண்டத்தினால் சகல திசைகளும் எல்லைப்படுத்தப்பட்டதுமான கனேலந்த முகலான என்றழைக்கப்படும் காணிப்பிரதேசமனைத்தும்.

**அட்டவணை ஆ**

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்றக்கோறளையிலுள்ள கிரிபொறுவ கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள நெதுருனக் கிராமத்தைக் கொண்ட காணிப் பிரதேசம் அடங்கலும்.

5–103/4—04.05.73ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

**உள்ளூராட்சி (நிர்வாகப் பிராந்தியங்கள்) கட்டளைச்சட்டம்**
**(அத்தியாயம் 265)**

பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எச். பி. விஜேசிங்க அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கப்படும் வரை, 1973 சனவரி 1 ந் திகதியிலிருந்து கேகாலைப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இலங்கை நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். என். பீ. டபிள்யு. எம். மந்திரிபால அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கப்படும்வரை, 1973 சனவரி 1 ந் திகதியிலிருந்து அனுராதபுரப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த செல்வி கே. ஜீ. டீ. விமலசிரி அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கப்படும்வரை, 1973 சனவரி 1 ந் திகதியிலிருந்து மாத்தளைப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எச்.எம். எச். பண்டா அவர்கள், மேற்கொண்டு கட்டளைகள் பிறப்பிக்கப்படும்வரை, 1973 பெப்புருவரி 15 ந் திகதியிலிருந்து குருநாகல் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் I ந் தர ஆய்வு உத்தியோகத்தர் திரு. ரீ. பீ. வர்சகோன் அவர்கள், இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. எம். பேமதிலக அவர்கள் கடமைக்குத் திரும்பும்வரை, 1973 பெப்புரவரி 17 ந் திகதியிலிருந்து மொனருகலைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு.

மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 10 ந் உ.

5–35—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும்

**உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையின் தரம் II நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை—21.07.73**

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையில் (தரம் II) நி. எ. வகுப்பிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை கொழும்பில் 21.07.73 ல் பரீட்சைகள் ஆணையாளரால் பரீட்சை நடாத்தப்படும்.

2. **விண்ணப்பங்கள்.**—(1) பரீட்சைப் பிரவேசத்துக்கான விண்ணப்பங்கள், கொழும்பு, த. பெ. 530, உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

(2) 11.06.73 அன்று அல்லது அதற்கு முன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவு அஞ்சல் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

(3) தாம் கடமைபார்க்கும் உள்ளூராட்சி மன்றத் தலைவரூடாகத் தமது விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் சமர்ப்பிக்க வேண்டும். எந்த ஒரு பரீட்சார்த்தியும் இவ்விதம் செய்யத்தவறின் அவர் தகைமை யிழந்தவராகக் கருதப்படுவர்.

(4) 11.06.73 அன்று அல்லது அதற்கு முன் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டித் தமது விண்ணப்பங்களை நேரகாலத்துடன் தமது உள்ளூராட்சி மன்றத் தலைவர்களிடம் சமர்ப்பிக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள்.

(5) பின்வரும் அடிப்படையில், இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீசார்த்திகளிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது :—

(அ) முதல் அமர்வு—கட்டணமெதுவுமில்லை.
(ஆ) பிற்பட்ட ஒவ்வொரு அமர்விற்கும் :—

| | | ரூ. ச. |
|---|---|---|
| முழுப் பரீட்சை | .. .. | 15 0 |
| ஒரு பாடம் | .. .. | 7 50 |

கட்டணங்கள் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்பட வேண்டும்.

இப்பரீட்சைக்கு ஏற்கெனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்த வேண்டப்படுகிறார்கள்.

3. **பரீட்சைப் பிரவேசம்.**—(1) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு உள்ளூராட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளர் பிரவேசப் படிவங்களை விநியோகிப்பார். பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப் படிவங்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய படிவத்தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்

(2) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமர வேண்டும். தமக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத்தில் தோற்றும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(3) பிரவேசப்படிவத்துடன், நேரசூசிப்பிரதியும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சைத் தினத்தன்று, மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவரிடம் தனது பிரவேசப் படிவத்தைக் கையளிக்க வேண்டும்.

(4) பரீட்சைத் தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப்படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக்குப் பிரவேசப் படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர்
(2) முழுப் பெயர்
(3) முழுத் தபால் முகவரி
(4) ஸ்தாபனம்

பி.கு. —பரீட்சைக்குப் பிரவேசம் அளிக்கப்பட்டால், தகுதித் தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றுகாது.

4. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதியற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது அதன்போது அல்லது அதன் பின் எந்த இடத்திலேயும் அவரது பரீட்சார்த்தம் இரத்துச் செய்யப்படத்தக்கது.

5. **உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை.**—உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டு தமது சபைகளில் கடமை பார்க்கும் உத்தியோகத்தர்களுக்கும் கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத்தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

6. **அடையாள அட்டைகள்.**—தாம் தோற்றும் ஒவ்வொருபாடத்தின் போதும், மேற்பார்வையாளரின் திருப்திக்கிணங்க, பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்ற அடையாளத்தைப் பரீட்சார்த்திகள் நிரூபிக்க வேண்டும். இதற்கென பின்வரும் தாஸ்தாவேஜுகளில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சற் பகுதி மா அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்ட சட்டப்பெறுமதியான கடவுச்சீட்டு ;

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்டதும், உரிமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தரவுச் சீட்டுச்சான்றிதழ் அல்லது வேறு எந்த தஸ்தாவேஜுகளாவது ;

(ஈ) கடவுச் சீட்டின் (பாஸ்போட்) அளவுள்ள புகைப்படம், அதன் பின் பக்கத்தில் கீழ்க்காட்டப்படும் அத்தாட்சி, அவ்வாறு அத்தாட்சிப் படுத்தக்கூடியவர் கையொப்பப்படிவத்திலும் அத்தாட்சிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

பின்புறத்திலுள்ள புகைப்படம்................................ என்பவருடையதென்பதையும் அன்னாரின் கையொப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதென்பதையும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளச் சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமையிழந்தவராவர்.

7. இப்பரீட்சைக்கான பாடங்களும், ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன :—

(1) (அ) இரு தேசிய மொழிகள்—சிங்களமும் தமிழும்—புள்ளிகள். இப்பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டது—அதாவது (1) உரையாடுதலும் பொருள் கோடலும்—புள்ளிகள் 100

(2) வாசித்தலும் எழுதுதலும்—புள்ளிகள் 100

மேற்சொன்ன விதி 1 (அ) (1) இன் கீழ் உள்ள பரீட்சையில், வெவ்வேறுவகைச் சிங்களம் அல்லது தமிழைப் புரிந்து கொள்ளுந்திறமையிலும், சாதாரண உரையாடுதலிலும், உத்தியோக கருமங்களின்போதும் தன்னைப் புரிந்து கொள்ளுமாறு உரையாடுதலிலும், பரீட்சிப்பவரைத் திருப்திப்படுத்தும் வகையில், உரையாடலில், பரீட்சார்த்தி சோதிக்கப்படுவார். ஆங்கிலமே தெரியாத சிங்களம் அல்லது தமிழருக்கும் பரீட்சிப்பவர்களுக்குமிடையே பொருள் கோடுபவராகவும் அவர் இருக்க வேண்டும், சாதாரண உத்தியோக கருமங்களுடன் தொடர்புடைய விஷயங்கள் பற்றியதாக பொருள் கோடலிருக்கும். முழுப் புள்ளிகளிலும் குறைந்தது 40 சதவிகிதம் புள்ளிகளை இப்பரீட்சையில் பரீட்சார்த்தி பெறுதல் வேண்டும்.

மேற் சொன்ன விதி 1 (அ) (2) இன் கீழ் உள்ள பரீட்சையில், வெவ்வேறு கையெழுத்துகளில் எழுதப்பட்ட இரு சிறிய சிங்களம் அல்லது தமிழ் அறிக்கைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதவும், ஆங்கிலத்திலுள்ள கட்டளையை சிங்களம் அல்லது தமிழுக்கு மொழி பெயர்க்கவும், சிங்களம் அல்லது தமிழில் உள்ள நொத்தாரிஸ் உறுதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதியை வாசிக்கவும் மொழி பெயர்க்கவும், முதல் முறையாகத் தனது கைகளுக்கு வரும் கிராம நீதிமன்ற வழக்குத் தொடர் நிகழ்ச்சிக் குறிப்புகளை வாசிக்கவும் மொழி பெயர்க்கவும் பரீட்சார்த்திகள் வேண்டும். முழுப் புள்ளிகளிலும் குறைந்தது 40 சதவிகிதம் புள்ளிகளை இப்பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெறுதல் வேண்டும்.

(அ) உள்ளூராட்சி மன்றங்களிலும், 19 ம், 20 ம் அதிகாரங்கள் தவிர்ந்த, இரண்டாவது பகுதி, அரசாங்க நிதிப்பிரமாணங்களிலும் பயன்படுத்தப்படும் கணக்குகள் முறை (2 மணித்தியாலம்) 100.

(ஆ) உள்ளூர் ஆட்சிச் சட்டம் (2 மணித்தியாலம்) 100.

இத்தாள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும் அவையாவன :—

பகுதி 1 : மாநகரசபை, நகரசபை, பட்டணசபைக் கட்டளைச் சட்டங்கள், விதிகள் இயற்றப்பட்ட துணைச்சட்டங்கள், அவற்றின் கீழ் இயற்றப்பட்ட உள்ளூராட்சி கட்டளைச் சட்டமும் பிரமாணங்களும் ஆகியவற்றின் அடிப்படையில் இப்பகுதிக்கான கேள்விகள் அமையும்.

பகுதி 2 : இப்பகுதியிலுள்ள கேள்விகள் பின்வரும் கட்டளைச் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மீதும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட துணைச் சட்டங்கள் மீது இயற்றப்படும் :—

(1) ஏலவிற்பனையாளர் தரகர் கட்டளைச் சட்டம்.
(2) இடுகாடுகள் சுடுகாடுகள் கட்டளைச் சட்டம்.
(3) ஊன் விலைஞர் கட்டளைச் சட்டம்.
(4) உள்ளூராட்சி மன்ற தராதரப்படுத்தப்பட்ட துணைச் சட்டங்கள் அதிகாரச்சட்டம்.
(5) நாய் பதிவுக் கட்டளைச் சட்டம்.
(6) மின்சார அதிகார சட்டம்.
(7) பொது அரங்காட்டுகள் கட்டளைச் சட்டம்.
(8) களியாட்ட வரிக்கட்டளை சட்டம்.
(9) உணவு, மருந்துவகைச் சட்டம்.
(10) வீடமைப்பும் நகர திருத்தமும் பற்றிய கட்டளைச் சட்டம்.
(11) உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்.
(12) விலங்கு விசர்நோய்க் கட்டளை சட்டம்.
(13) தெரு வசூலிப்புக் கட்டளைச் சட்டம்.
(14) நாடுநகரத் திட்டமைப்புக் கட்டளைச் சட்டம்.
(15) வாகனங்கள் கட்டளைச் சட்டம்.
(16) நிறைகளும் அளவைகளும் பற்றிய கட்டளைச் சட்டம்.

(ஆ) அத்துடன், மாநகரசபை, நகரசபை, பட்டணசபை அலுவலகங்களை ஒழுங்குபடுத்துதலும், உத்தியோக முறைகளும், நடைமுறைமையும்.

(2) சிங்கள, தமிழ் சோனகத் தாய் தந்தையரையுடைய உத்தியோகத்தர்கள் ஒரு மொழியையும், கணக்குகளையும், உள்ளூராட்சிச் சட்டத்தையும் சித்தியடைய வேண்டும்.

(3) வேறு தாய் தந்தையரையுடைய உத்தியோகத்தர்கள் கணக்குகளையும் உள்ளூராட்சிச் சட்டத்தையும் ஒரு மொழியையும் (உரையாடுதலும் பொருள் கோடலும் மாத்திரம்) சித்தியடைய வேண்டும்.

(4) மேற்கண்ட விதி 1 (ஆ) (இ) யின் கீழுள்ள பரீட்சைக்கான பரீட்சார்த்திகள், கணக்குகளிலும், உள்ளூராட்சிச் சட்டத்திலும் உள்ள மொத்த புள்ளிகளில் குறைந்தது 40% சதவிகிதமாகுதல் பெற வேண்டும்.

(5) ஒரு பரீட்சார்த்தி, தான் விரும்பினால், தனித்தனியாகவும் வெவ்வேறு தருணத்திலும் மொழி, கணக்குகள், உள்ளூராட்சிச் சட்டம் ஆகிய பாடத்தாள்களுக்கு அமரலாம்.

8. **தவிர்க்கப்படுதல்.**—(அ) 50 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் அதாவது 11.06.73 இல் 50 வது பிறந்த தினத்தை எய்துபவர்கள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு மேல் பதவி உயர்வுக்கான பரீட்சையினின்றும் தவிர்க்கப்படுவார்கள் ; ஆனால் அவர்களது வேலையும் நடத்தையும் இச்சலுகைக்கு அவசியம் என்றும், ஒவ்வொரு விடத்திலும் இந்தச் சலுகைக்கு உத்தியோகத்தர் உரித்தாகிறார் என்ற அதிகாரசபை திருப்திப்பட்ட பின்புதான் தவிர்க்கப்படுவார்கள்.

(ஆ) 01.04.1946 ல் உள்ளூராட்சிச் சேவைக்கு மாற்றப்பட்ட எல்லா உத்தியோகத்தர்களும், இப்பரீட்சைக்கு விதந்துரைக்கப்பட்ட தேசிய மொழிகள் தரங்களினின்றும் தவிர்க்கப்பட்டவராவர்.

(இ) பின்வரும் பரீட்சைகளில் ஏதாவதொன்றில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகள், சிங்களம்/தமிழ் பாடத்தினின்றும் தவிர்க்கப்பட உரித்தாளவராவர் :

(1) உயர்தரத்தில் அல்லது சாதாரண தரத்தில் சிங்களம் அல்லது தமிழில் தேர்ச்சிப்பரீட்சை.

(2) தரம் 4 அல்லது தரம் 5 ல் சிங்களம் அல்லது தமிழில் தேர்ச்சிப் பரீட்சை.

(3) இலங்கை சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை (சிங்களம்/தமிழ்).

(4) சிங்களம் அல்லது தமிழ் ஒரு பாடமாகக் கொண்ட இலங்கை சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் ஆங்கில மொழி மூலப் பரீட்சை.

(5) இலங்கைக் கல்விப் பொதுச்சான்றிதழ் (சாதாரண தரம்) சிங்களம் அல்லது தமிழ்மொழி மூலப்பரீட்சை.

9. சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியின் IV வது பகுதியில் பிரசுரமாகும்.

எட்கா பர்னாந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. 530, கொழும்பு 1,
1973 ம் ஆடு ஏப்ரல் 24 ந் உ.

உள்ளூராட்சி விண்ணப்பப் படிவம்

**உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையின் (தரம் 2), நி. எ. உத்தியோகத்தர்களுக்கான வி. தி. கா. தடைப்பரீட்சை—1973**

1. முழுப் பெயர் : ————.
(தடித்த எழுத்துக்களில்)

2. உள்ளூராட்சி மன்றத்திற்கு முதலில் நியமிக்கப்பட்ட திகதியும் மாற்றப்பட்ட உத்தியோகத்தரா என்றும் : ————.

3. உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையின் நி. எ. வகுப்புக்கு (தரம் 2) முதலில் நியமிக்கப்பட்ட திகதி : ————.

4. தற்போதைய வேதனமும், வேதன அடிப்படையும் : ————.

5. பரீட்சார்த்தி தற்போது ஊழியஞ் செய்யப்படும் உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் : ————.

6. வர்த்தமானி அறிவித்தலின் 7 வது பந்தியில் குறிப்பிடப்படும் சிங்களம்/தமிழ் பாடத்தினின்றும் தவிர்க்கப்படப் பரீட்சார்த்தி உரித்துடையவராயின், பின்வரும் தகவல்களைத் தரவும் :—

(அ) சித்தியடைந்த பரீட்சையின் பெயர் : ————.
(ஆ) பரீட்சை நடைபெற்ற திகதி : ————.
(இ) சுட்டிலக்கம் : ————.

7. முன்னைய வருடமொன்றில் பரீட்சைக்குத் தோற்றினீர்களா என்று குறிப்பிடவும், ஆமாயின் சித்தியடைந்த பாடம் : ————.

8. எந்தப்பாடங்கள் எடுப்பீர்கள் என்று குறிப்பிடவும் :—

(1) கணக்குகளும் உள்ளூராட்சிச் சட்டமும் : ————.
(2) சிங்களம் (அ) உரையாடுதலும் பொருள் கோடலும் : ————.
(ஆ) வாசித்தலும் எழுதுதலும் : ————.
(3) தமிழ் (அ) உரையாடுதலும் பொருள் கோடலும் : ————.
(ஆ) வாசித்தலும் எழுதுதலும் : ————.

குறிப்பு : சிங்களத்திலும் தமிழிலும் உள்ள பரீட்சை—(அ) உரையாடுதலும் பொருள் கோடலும் ; (ஆ) வாசித்தலும் எழுதுதலும் ஆகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

9. பின்வரும் மொழிகளில் எந்த மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவீர்கள் என்று குறிப்பிடவும் :—

(அ) சிங்களம் : ————.
(ஆ) ஆங்கிலம் : ————.

| இவ்விடம் முத்திரை ஒட்டி ஒப்பமிடவும் |
|---|

10. இப்பரீட்சைக்கு முதல் தடவையாக அமர்கிறீரா.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.
செயலாளர், உ. ஆ. சே. அ. ச.

இச்சபையின் பணியாளராயுள்ள, மேற்படி பரீட்சார்த்தி, உள்ளூராட்சிச் செயலாளர் சேவையின் தரம் 4 இல் உள்ளார் என்று நான் சான்றுரைக்கிறேன். அவரது விண்ணப்பித்தல் அவரால் தரப்படும் தகவல்கள் சரியானவை.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
தலைவர்/ஆணையாளர்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(உள்ளூராட்சிமன்றம்)

திகதி : ————.

5–96—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

## துணை விதிகள்

**வரக்காப்பொலைப் பட்டினசபை**

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் வரக்காப்பொலைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

காமினி விக்ரமநாயக,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆடு ஏப்ரல் மீ 04 ந் உ.

**துணைவிதிகள்**

1. (1) இத்துணைவிதிகள் 1973 ம் ஆண்டின் வரக்காப்பொலைப் பொதுமுறைச்சந்தை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) " வரக்காப்பொலைப் பொதுமுறைச்சந்தை " என வழங்கப்பட வேண்டியதும் அறியப்படவேண்டியதுமான முறைச் சந்தை ஒன்று ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் அல்லது சபையால் நிச்சயிக்கப்படும் வேறேதுமொரு நாளில் சபையால் நடாத்தப்படுதல் வேண்டும்.

2. வரக்காப்பொலைப் பொதுமுறைச்சந்தையிலிருந்து நாநூற்று நாப்பது யார் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துக்குள் உள்ள பிரதேசம் வரக்காப்பொலைப் பொதுமுறைச் சந்தைக்கான சந்தைப் பிரதேசமாக இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

3. (1) தலைவரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை உடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலையாளராக அல்லது முகவராக இருந்தாலன்றி எவரும் முறைச்சந்தையின் வளவில் உள்ள ஏதேனும் விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தை பயன்படுத்தவோ அதில் நிலைகொள்ளவோ ஆகாது.

(2) முதலாம் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச் சீட்டும் பொருளளவில் அதற்கான முதலாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இருக்கவேண்டும் என்பதோடு அது வழங்கப்படும் நாளுக்கு மட்டும் வலுவுள்ளதாக இருக்கவும் வேண்டும்.

4. மூன்றும் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டுடைய ஒவ்வொருவரும் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீதங்களிலான ஒரு கட்டணத்தை முறைச் சந்தையின் வளவிலுள்ள விற்பிடத்தை அல்லது வெற்றிடத்தைப் பயன்படுத்துவதற்காகக் கொடுத்தல் வேண்டும்.

5. நான்காம் துணைவிதியின் கீழ் கொடுபடற்பாலதான கட்டணங்களை சேகரித்தற்கென் அலுவலர் ஒருவரை சபையானது வேலையில் அமர்த்தாவிட்டால் அது கட்டணங்கள் சேகரித்தற்கான உரிமையை—

(அ) தனிப்பட்ட உடன்படிக்கை மூலம், அல்லது

(ஆ) கேள்விப்பத்திரங்களைக் கோருதல் மூலம், அல்லது

(இ) அந்த உரிமையை ஏலத்தில் விடல் மூலம்
அங்கீகரிக்கப்பட்ட ஆளொருவருக்குக் குத்தகைக்கு விடலாம்.

6. (1) மூன்றும் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுடையார் எவரும் முறைச் சந்தையில் ஏதேனும் இறைச்சியை விற்றலோ விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ ஆகாது. ஆயின் எப்படியிருப்பினும் அத்தகைய பொருள் அல்லது பண்டம் அதற்கென தலைவரால் வழங்கப்படும் சிறப்பனுமதிச்சீட்டின் அதிகாரத்தின் கீழ் விற்கப்படலாம் அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டிவைக்கப்படலாம்.

(2) அத்தகைய அனுமதிச்சீட்டை வழங்குவதற்குப் போதிய நல்ல காரணங்கள் இருக்கின்றனவென்று தலைவர் திருப்திப்பட்டாலொழிய சிறப்பனுமதிச் சீட்டெதுவும் வழங்கப்படலாகாது.

7. மூன்றும் துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டையாருக்கிடையிலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் வேலையாட்களுக்குமிடையிலும், அவர்களுக்கும், பொது மக்களுக்குமிடையிலும் எழும் சந்தையைப் பயன்படுத்தல் பற்றிய பிணக்குகள் எவையும் முறைச்சந்தையின் வளவினுள் கடமைசெய்து கொண்டிருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்த்துவைக்கப்படலாம்.

8. முறைச்சந்தையின் வளவில் அமைதியானது, அந்நோக்கத்திற்கெனச் சபையால் நியமிக்கப்பட்டவரும் சந்தையின் வளவில் கடமை புரிந்துகொண்டு இருப்பவருமான ஓர் அலுவலரால் நிலைநாட்டப்படும்.

9. பொருட்கள் வாங்குவதற்கென அல்லது அவற்றை விற்றற்கென சந்தைக்குவரும் ஒவ்வோர் ஆளும் ஏதேனும் பிணக்கைத் தீர்த்து வைக்கும் முகமாக அல்லது அமைதியை நிலைநாட்டுவதற்காக சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் இடப்படும் சட்டப்படியான கட்டளைக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

10. முறைச் சந்தையின் வளவினுள் எவரும்—

(அ) சமையல் வேலை எதுவும் மேற்கொள்ளலாகாது, அல்லது

(ஆ) குழப்பமான முறையில் நடந்து கொள்ளல் ஆகாது அல்லது சத்தம் செய்தல் ஆகாது அல்லது குழப்பம் செய்தல் ஆகாது அல்லது வேறெவரேனும் ஆளுடன் சண்டையிடல் ஆகாது அல்லது மானபங்கமான முறைகேடான அல்லது இடக்கம் மொழிகள் பேசுதல் ஆகாது அல்லது

(இ) சந்தை வளவையிட்டு வெளியேறும்படி சபையின் அலுவலர் ஒருவரால் அல்லது இராமசேவகர் ஒருவரால் அல்லது பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் எவரேனும் ஆளால் கட்டளையிடப்பட்டதன் பின்னர் அவர் அவ்வாறு நிற்பதற்குத் திருப்தியான காரணம் காட்ட முடியாத நிலையில் அங்கு நிற்றலோ அங்குமிங்கும் அலைதலோ கூடாது.

11. (1) தலைவர் அல்லது சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் செயற்படும் பொது சௌக்கியப் பரிசோதகர் எவரும் முறைச்சந்தையின் வளவினுள் விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்டிருப்பதும் உடனலத்திற்குகந்ததல்லவென்று அவர்க்குத் தோன்றுவதுமான ஏதேனும் பொருளைப் பரிசோதித்தலும் அதைக் கைப்பற்றுதலும் அவர்க்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) முதலாம் பந்தியின் கீழ் கைப்பற்றப்பட்ட பொருள் என்று, உடனலத்திற்குகப்பில்லாததென்று அரசாங்க மருத்துவ அலுவலரால் சான்றளிக்கப்பட்டு இருக்கின்றவிடத்து அத்தகைய பொருளானது எவரின் உரிமையிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவருக்கு நட்டஈடு எதுவும் கொடுக்கப்படாமலே அழிக்கப்படலாம்.

12. (1) முறைச்சந்தையைக் கண்காணிப்பதற்கென தலைவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அல்லது ஆள் ஒருவர் அவரது கடமைகளைப் புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

(2) கட்டணங்களைச் சேகரிப்பதற்கெனச் சபையால் நியமிக்கப்பட்ட ஒரு ஆள் அல்லது (அத்தகையகட்டணம் சேகரிப்பதற்கான உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றவிடத்து) அத்தகைய குத்தகை எடுப்பவர் தமது கடமையைப்புரியும்போது அவரை எவரும் மறிக்கவோ, தடுக்கவோ, தடைசெய்யவோ, அவருக்குத் தொந்தரவு கொடுக்கவோ கூடாது.

13. ஆளெவரும் —(அ) முறைச் சந்தை நிகழ்த்தப்படும் நாளுக்கு முந்திய நாளன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் முறைச்சந்தை வளவில் கொட்டில் போடுதலோ கூடாரம் அடித்தலோ, பாய்கள் அல்லது சாக்குகளை இடுதலோ கூடாது, அல்லது

(ஆ) முறைச் சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் காலை 9 மணிக்கும் பின்னர் கொட்டில் எதையும், கூடாரம் எதையும் பாய் எதையும் சாக்கெதையும் அல்லது வேறெந்தப் பொருள் எதையும் வளவில் இருக்கவிடுதல் ஆகாது.

14. தலைவர் அல்லது தலைவரின் அதிகாரத்தின் கீழ் தொழிற்படும் வேறு யாரேனும் சபை அலுவலர் முறைச்சந்தை நிகழ்ந்த நாளுக்கு அடுத்த நாள் காலை 9 மணிக்குப் பின்னர் சந்தை வளவில் கிடைக்கும் எவையேனும் கொட்டில்களை, கூடாரங்களை, பாய்களை, சாக்குகளை அல்லது வேறெவையேனும் பொருட்களை அகற்றுதல் அவர்களுக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

15. இந்தத் துணைவிதிகள் எவற்றையேனும் மீறும் ஒவ்வொரு மீறுகையும் 100 ரூபாவிற்கு மிகாத ஒரு குற்றப்பணத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் என்பதோடு அத்தகைய மீறுகை தொடர்ந்தும் செய்யப்பட்டு வருகின்றவிடத்து அத்தகைய மீறுகைக்காகத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டபின்னர் அல்லது அவ்வாறு மீறுகை செய்யப்படுகின்றது என்பதை குறித்துக் கூறும் எழுத்து மூல அறிவித்தலொன்று தலைவரால் அல்லது தலைவர் தீர்க்கமளிக்கப்பட்ட அலுவலரொருவரால் அத்தகைய மீறுவோருக்கு விடுக்கப்பட்டதன் பின்னர் அத்தகைய மீறுகை தொடந்து செயற்பட்டுவருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் 25 ரூபாவுக்கும் மிகாத மேலதிகக் குற்றப்பணம் ஒன்றுலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

**வரக்காப்பொலைப் பட்டின சபை**

வரக்காப்பொலைப் பொது முறைச்சந்தை

திகதி.................19....

இடமிருந்து ரூபா.......... சதம்...... ஐப் பெற்றுக்கொண்டேன்.

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| 1. | கடை/இடம் இல. | .. | .. | |
| 2. | வாழைப்பழங்கள்/பாக்குகள்/இளநீர்கள் | | .. | |
| 3. | வாகனங்கள் | .. | .. | |
| 4. | நானாவிதமானவை | .. | .. | |

**மொத்தம்**

............................
சேகரிப்பாளர் கையொப்பம்.

அட்டவணை II

நாளொன்றுக்கு

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| 1. | 80 சதுர அடி பரப்புடைய ஒரு காய்கறிக் கடைக்கு .. | 2 | 0 |
| 2. | 25 சதுர அடி பரப்புடைய ஒரு காய்கறிக்கடைக்கு .. | 1 | 25 |
| 3. | 80 சதுர அடி பரப்புடைய கருவாட்டுக்கடைக்கு .. | 1 | 0 |
| 4. | 80 சதுர அடி பரப்புடைய வெற்றிலைக்கடைக்கு .. | 1 | 0 |
| 5. | காய்கறிக்கு 16 சதுர அடி பரப்புடைய இடமொன்றுக்கு | 0 | 40 |
| 6. | மட்பாண்டத்துக்கு 30 சதுர அடி பரப்புடைய இடமொன்றுக்கு .. .. .. | 1 | 0 |
| 7. | 20 க்கு குறைந்த வாழைப்பழக் குலைகளுக்கு, குலையொன்றுக்கு .. .. | | 05 |
| 8. | 20 க்கு கூடுதலான ஆனால் 25 க்கு மேற்படாத வாழைப்பழக் குலைகளுக்கு .. .. | 1 | 0 |
| 9. | 25 க்கு மேற்பட்ட வாழைப்பழக் குலைகளுக்கு குலையொன்றுக்கு .. .. | 0 | 04 |
| 10. | இளநீர்களுக்கு 100 க்கு .. .. | 0 | 60 |
| 11. | பாக்குகளுக்கு 1000 க்கு .. .. | 0 | 25 |
| 12. | கலவைப்பொருட்களுக்காக 20 சதுர அடிப்பரப்பைக் கொண்ட ஓரிடத்துக்கு .. .. | 0 | 50 |

5–100—04,05,73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள உடபுலத்கம பஸ்பகே கோறளைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 23 ந் உ.

#### துணைவிதி

1953 நவெம்பர் 14 ந் தேதிய 10,621 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் வாயிலாக உடபுலத்கம பஸ்பகே கோறளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத் துணை விதிகளின் XXVIII ம் பாகத்தில் காணப்படுகின்ற தண்ணீர்ச் சேவை சம்பந்தமான துணைவிதிகள், 27(2) ம் துணைவிதிக்கு உடனடுத்துப் பின்வரும் புதிய துணைவிதியை உட்புகுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

(3) “27 (அ) சபையால் நிறுவப்பட்டுள்ள தண்ணீர்ச் சேவையிலிருந்து ஒரு தனியார் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள எதேனும் வளவின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன்மேல் சொல்லப்பட்ட தண்ணீர் பெறும் ஒவ்வொரு மாதம் தொடர்பாகவும் அத்தகைய வளவில் பொருத்தப்பட்டுள்ள முதல் ½ அங்குல வடிகுளாய் ஒவ்வொன்றுக்காகவும் 1 ரூபா 50 சதம் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.”

“1969.9.19 ந் தேதிய 14,872 ம் இலக்கக் கசற்றில் பிரசுரிக்கப்பட்ட, உடபுலத்கம பஸ்பகே கோறளை கிராமச் சபையினது தண்ணீர் வரி சம்பந்தமான துணைவிதிகள் இத்தால் நீக்கஞ் செய்யப் படுகின்றன.”

5–101—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

---

### கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் மொனருகலை பதுளை மீகஹகியுல்லக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1973 ம் ஆண்டு ஏப்ரில் மீ 10 ந் உ.

#### துணைவிதி

மீகஹகியுல்லக் கிராமப் பிரதேசத்துக் கிராமச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நீர் வழங்கல் சம்பந்தமான நியமத்துணைவிதிகளின் XXVIII ஆம் பாகமானது, அது அச்சபைக்கு ஏற்புடையதாகக் கூடியவரையில், 27 (2) ம் துணைவிதியை நேரடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

“(3) சபையினால் தாபிக்கப்பட்டிருக்கும் நீர் வழங்கலிலிருந்து தனியாருக்கான இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள மனையகம் எதனதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர், முறைப்படி அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டதன் மேல் சொல்லப்பட்ட நீர் வழங்கலிலிருந்து தண்ணீர் பெறும் ஒவ்வொரு வருடத்துக்கும் பின்வரும் வீதங்களின்படி கட்டணஞ் செலுத்துதல் வேண்டும் :

விகிதங்கள்

| | | முதலாவது ½ அங்குலக் குழாய்க்கு | | | மேலதிக ½ அங்குலக் குழாய் ஒவ்வொன்றுக்கும் | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | ரூ. | ச |
| இணைப்பானது, வீட்டு உபயோகமல்லாதவற்றுக்கான நீர் வழங்கலுக்கான இணைப்பாகவிருக்குமிடத்து | .. | 120 | 0 | .. | 30 | 0 |
| இணைப்பானது, வீட்டு உபயோகத்திற்கான நீர் வழங்கலுக்கான இணைப்பாகவிருக்குமிடத்து | .. | 30 | 0 | .. | 12 | 0 |

5–33—04.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 58

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய இரய விகிதங்கள்

1.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர் அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்டல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக சரிப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க உதவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையின் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்டருல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட இரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் இரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கலாவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்காய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மே .. | 4.5.73 | வெள்ளி .. | 27. 4.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 11.5.73 | வெள்ளி .. | 4. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 18.5.73 | வெள்ளி .. | 11. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 25.5.73 | வெள்ளி .. | 18. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| யூன் .. | 1 6.73 | வெள்ளி .. | 25. 5.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 1. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 8. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 14. 6.73 | வியாழன் .. | ந. ப. | 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 22. 6.73 | வெள்ளி .. | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஓகத்து 18 ௴ ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.